# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
# (கலை பண்பாட்டு ஆணையகம், தமிழ்நாடு அரசு)

## செய்திக்குறிப்பு

தமிழக அரசின் ஆணைப்படி, உலக நாடக தினம் (WORLD THEATRE DAY) ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று தமிழகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. இதில், புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகங்கள் போன்ற ஒன்பது வகையான புதிய நாடகங்களை மேடையேற்றம் செய்திட தகுதியுள்ள வல்லுநர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்கூறிய ஒன்பது துறைகளிலிருந்தும், புதிய நாடகங்கள், புதிய கருத்துருக்களைக் கண்டறிந்து, அவற்றை நாடக வடிவில் எழுதி, கட்டமைத்து துறைக்கு ஒரு நாடகம் என்று மேடையேற்றம் செய்திட திட்டமிடப் பட்டுள்ளது. மேலும், கருத்துருக்கள் புதியனவையாகவும், அவை கண்டறியப்பட்ட மூலநூல்களிலிருந்து வேறுபடாதவாறும் அவற்றை நாடகங்களாக அமைத்திட வேண்டும்.

நமது பண்பாடு, கலாச்சாரம், மொழி, கலைகள்,ஒருமைப்பாடு போன்றவற்றிற்கு மாறுபட்ட கருத்துக்கள் இந்த நாடகங்களில் இடம்பெறாதவாறு அமையப்பெற வேண்டும். மேலும் மேடையேற்றம் செய்யப்பட உள்ள புதிய நாடகங்கள் அரசையோ அல்லது அரசின் திட்டங்களையோ விமர்சனம் செய்யாதவாறும், இந்திய அரசியலாமப்புச் சட்டத்திற்கு உட்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் அமையப்பெற வேண்டும்.

ஒவ்வொரு நாடகமும் சுமார் 2 மணி நேரத்திற்குள் முடியும் வகையில் அமையப்பெற வேண்டும். நாடகம் மேடையேற்றம் செய்வதற்கான அமைப்புச் செலவினம் மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். நாடக ஆசிரியர் மற்றும் நாடகக் குழுவிற்கு மன்றத்தால் நிர்ணயிக்கப்படும் மதிப்பூதியமும் வழங்கப்படும்.

மேலே கூறியுள்ள திட்டங்களின் கீழ், பங்கு பெற விரும்பும் வல்லுநர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பத்துடன் புதிய நாடகத்தின் தலைப்பு மற்றும் நாடகத்தின் மூன்று முழுப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். மேலே கூறியுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பங்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 05–02–2021 தேதி (வெள்ளிக் கிழமை) மாலை 05.00 மணி.


**உறுப்பினர்–செயலாளர்,**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,**
**31, பொன்னி, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை,**
**சென்னை–600 028.தொ.பே.044–2493 7471.**
**மின்னஞ்சல்– tneinm@gmail.com, tneinm@tn.gov.in**

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பொன்னி, 31, பி.எஸ்.குமாரசாமி சாலை, சென்னை–600 028
தொலைபேசி – 044–2493 7471

**ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று கொண்டாடப்பட உள்ள உலக நாடக தினத்தை முன்னிட்டு (WORLD THEATRE DAY) புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகங்களை மேடையேற்றம் செய்யும் திட்டத்தின்கீழ், விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**(மன்றத்திற்கு விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 05.02.2021)**

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் / கலைக்குழுவின் பெயர் | | |
| 2 | விண்ணப்பதாரர் / கலைக்குழு நடத்தும் முக்கியப் பொறுப்பாளரின் பதவி, பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி | : | |
| 3 | விண்ணப்பதாரரின் வயது<br>(முடித்த ஆண்டுகள்)<br><br>பிறந்த தேதி | : | |
| 4 | கலைஞர் / கலைக்குழு பதிவு செய்யப்பட்டதா? ஆம் எனில் பதிவு எண் மற்றும் ஆண்டு. (சான்று இணைக்கப்பட வேண்டும்)<br><br>கடந்த ஐந்து ஆண்டுகளில் இக்கலைஞர் / கலைக்குழு ஆற்றிய கலைப் பணிகள் பற்றிய விவரம் (சான்றுகளுடன்)<br><br>கலைக்குழுவின் குறிக்கோளும் ஆற்றிய பணிகளின் விவரம் | : | |

| | | | |
|---|---|---|---|
| 5 | வருமானவரி கணக்கு எண் (PAN No.) | : | |
| 6 | வங்கியின் பெயர் , கணக்கு எண் (ம) முகவரி | : | |
| 7 | புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகத்தை எழுதிய ஆசிரியரின் பெயர் மற்றும் முகவரி | : | |
| 8 | விண்ணப்பதாரர் எழுதியுள்ள நாடகத்தின் மூலக்கருத்து எடுக்கப்பட்ட மூலநூல் மற்றும் மூலநூலின் எப்பகுதியில் எடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் (மூலநூலின் எடுக்கப்பட்ட பகுதியின் நகலை இணைக்கவும்) | : | |
| 9 | மேடையேற்றத்திற்காக நிதியுதவி கோரப்படும் புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகத்தின் பெயர் / கதைச்சுருக்கம் (3 பிரதிகள்) | : | |
| 10 | மேடையேற்றத்திற்காக நிதியுதவி கோரப்படும் புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகம் ஏற்கனவே வேறெங்கிலும் மேடையேற்றம் செய்யப்பட்டதா ? அவ்வாறு செய்யப்பட்டிருந்தால், அதன் விவரம் – ஆண்டு, நாள், இடம், நிதியுதவி போன்றவை | | |

| | | | |
|---|---|---|---|
| | தரப்படவேண்டும். | | |
| 11 | மேடையேற்றத்திற்காக நிதியுதவி கோரப்படும் புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகத்திற்கு ஏற்கனவே மத்திய மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டதா? ஆம் எனில், எந்த ஆண்டு, எந்த திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறப்பட்டது என்ற விவரம் தரவும் | | |

<u>நிபந்தனைகள்:—</u>

1. புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகத்திற்கேற்வாறு மதிப்பூதியம் மன்றத்தால் நிர்ணயம் செய்யப்படும்.

2. புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகத்தை மன்றம் ஏற்பாடு செய்யும் அரங்கில் (சபா) மேடையேற்றம் செய்யும் கலைக்குழுவிற்கு வழங்கப்படும் மதிப்பூதியம் உட்பட போக்குவரத்துக்கான தொகையினை கலைக்குழுவின் பெயரில் காசோலையாக வழங்கப்படும்.

3. அக்காசோலையினை கோரும் கலைஞரின் முழு பெயர் மற்றும் வங்கி கணக்கு எண் தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும்

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும், விதிமுறைகள் அனைத்தும் படித்து அறிந்துகொண்டதன் அடிப்படையில், விதிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றுவேன் எனவும், உறுதி கூறுகிறேன்.

(விண்ணப்பதாரரின் கையொப்பம்)

* பி.கு. – கூடுதல் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட வேண்டும்.